# ‘திராவிட மாடல்’ நாயகரின் சூறாவளிப் பிரச்சாரம்!

## ‘கொங்கு மண்டலமே தி.மு.க.வின் கோட்டை’ என நிரூபித்து கோவையில் குவிந்த கொள்கை மறவர்கள் கூட்டம்!



## தமிழ்நாட்டை வஞ்சிப்பதுடன், அவமானப்படுத்துவதால் பா.ஜ.க.வை தமிழ்நாட்டு மக்கள் வெறுக்கிறார்கள்!

# அ.தி.மு.க. ஆட்சியில் பழனிசாமி செய்த சாதனைகளைப் பட்டியலிட முடியுமா?

## கோவை – தேர்தல் பிரச்சாரக் கூட்டத்தில் தலைவர், முதல்வர் மு.க.ஸ்டாலின் முழக்கம்!



கழகத் தலைவரும் முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (2.4.2026) கோவையில் நடைபெற்ற சட்டமன்ற பொதுத்தேர்தல் பிரச்சார பொதுக்கூட்டத்தில், கோவை தெற்கு மாவட்ட கழகச் செயலாளரும், சூலூர் தொகுதி கழக வேட்பாளருமான தளபதி முருகேசன், கோவை மாநகர் மாவட்ட கழகச் செயலாளரும், கோயம்புத்தூர் வடக்கு கழக வேட்பாளருமான செந்தமிழ்ச் செல்வன், கோயம்புத்தூர் தெற்கு தொகுதி கழக வேட்பாளர் வி. செந்தில்பாலாஜி, கிணத்துக்கடவு தொகுதி கழக வேட்பாளர் கே.வி.கே.எஸ். சபரி கார்த்திகேயன், வால்பாறை தொகுதி கழக வேட்பாளர் ஆ. சுதாகர், கொங்குநாடு மக்கள் தேசிய கட்சியின் பொள்ளாச்சி தொகுதி வேட்பாளர் கே.நித்தியானந்தன், காங்கிரஸ் கட்சியின் சிங்காநல்லூர் தொகுதி வேட்பாளரையும் ஆதரித்து தேர்தல் பிரச்சாரம் மேற்கொண்டார். இக்கூட்டத்தில், மேற்கு மண்டல கழக பொறுப்பாளர் சட்டமன்ற உறுப்பினர் வி. செந்தில்பாலாஜி, தோழமை கட்சித் தலைவர்கள் கொங்கு நாடு மக்கள் தேசிய கட்சித் தலைவர் ஈ.ஆர். ஈஸ்வரன், தமிழ்ப் புலிகள் கட்சித் தலைவர் நாகை திருவள்ளுவன், திராவிட தமிழர் கட்சித் தலைவர் வெண்மணி, ஆதித்தமிழர் கட்சித் தலைவர் ஜக்கையன், ஆதித்தமிழர் பேரவை தலைவர் அதியமான், தந்தை பெரியார் திராவிடர் கழகத்தின் பொதுச் செயலாளர் ராமகிருஷ்ணன், கழகத்தின் மூத்த முன்னோடிகள் முன்னாள் அமைச்சர்கள் பொங்கலூர் பழனிசாமி மற்றும் மு. கண்ணப்பன், நாடாளுமன்ற உறுப்பினர் கணபதி ராஜ்குமார், கோவை வடக்கு மாவட்ட கழகச் செயலாளர் தொ.அ. ரவி, தோழமைக் கட்சிகளின் மாவட்ட கழகச் செயலாளர்கள், தலைமைக் கழக நிர்வாகிகள், கழகத்தின் பல்வேறு அணிகளைச் சார்ந்த நிர்வாகிகள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

**கோவை,ஏப்.4-**

**நான் அதிக முறை வந்த மாவட்டம் கோவை. கோவையோடு நான் ஒன்றிப் போயிருக்கிறேன். பழனிசாமி தமது ஆட்சியில் செய்த சாதனைகளைப் பட்டியலிட முடியுமா? தமிழை, தமிழரை, தமிழ்நாட்டை வஞ்சிப்பதுடன், வெளிப்படையாக அவமானப் படுத்துவதால்தான் பா.ஜ.க.வைத் தமிழ்நாடு வெறுக்கிறது! என கோவையில் நடைபெற்ற கூட்டத்தில் தலைவர், முதல்வர் மு.க.ஸ்டாலின் குறிப்பிட்டார்.**

**கழகத் தலைவரும், முதலமைச்சருமான மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (02-04-2026) மாலை, கோயம்புத்தூரில் நடைபெற்ற சட்டமன்றத் தேர்தல் பரப்புரைப் பொதுக்கூட்டத்தில் மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி வேட்பாளர்களை ஆதரித்து ஆற்றிய உரை வருமாறு:**

2021-ஆம் ஆண்டு திராவிட மாடல் ஆட்சி அமைந்ததில் இருந்து, நான் அதிக முறை வந்த மாவட்டம் எது தெரியுமா? இந்தக் கோவை மாவட்டம்தான். இன்னும் சொல்லப்போனால், ஆட்சிக்கு வந்தபோது கொரோனா என்ற கொடிய நோய் உச்சத்தில் இருந்தது. முதலமைச்சரான அடுத்த மாதமே PPE கிட் அணிந்துகொண்டு, கோவை இ.எஸ்.ஐ. மருத்துவமனையில் கொரோனா தடுப்புப் பணிகளை ஆய்வு செய்தவன்தான் இந்த ஸ்டாலின் என்பது உங்களுக்குத் தெரியும். அதிலிருந்து, தொடர்ந்து பல முறை அரசு நலத்திட்ட நிகழ்ச்சிகள், கள ஆய்வில் முதலமைச்சர் ஆய்வுக்கூட்டம், தமிழ்ப்புதல்வன் திட்ட தொடக்க விழா, உலக புத்தொழில் மாநாடு, பல்வேறு திறப்பு விழாக்கள், பல்வேறு அடிக்கல் நாட்டு நிகழ்ச்சிகள் என்று ஏதாவது ஒரு விழாவிற்கு வந்து கொண்டுதான் இருப்பேன். கோவையும் என்னுடைய ஊர்தான் என்று சொல்லத்தக்க அளவிற்கு, கோவையோடு நான் ஒன்றிப் போயிருக்கிறேன். அதனால்தான், இப்போது நடைபெற உள்ள சட்டமன்றத் தேர்தலுக்கான முதற்கட்ட பரப்புரையிலேயே கோவைக்கு வந்துவிட்டேன்.

### செந்தில் பாலாஜி என்றாலே செயல்வீரர்! ஆற்றலாளர்!

**இப்போது வேட்பாளர்களை உங்களுக்கு நான் அறிமுகப்படுத்தப் போகிறேன்.**

முதலில் கோவை தெற்கு சட்டமன்றத் தொகுதி. நமது வெல்லும் வேட்பாளர் வி. செந்தில்பாலாஜி அவர்கள்! முன்னாள் அமைச்சர், கழத்தின் மேற்கு மண்டலப் பொறுப்பாளர். அவரைப் பற்றி உங்களுக்கு நான் அறிமுகம் செய்யத் தேவையில்லை. செந்தில்பாலாஜி என்றாலே செயல்வீரர். செயல்வீரர் என்றாலே செந்தில்பாலாஜி. நினைத்ததைச் சாதித்துக் காட்டுபவர் செந்தில்பாலாஜி. அதனால்தான் கோவையில் நிற்கிறார். எந்த வேலையை ஒப்படைத்தாலும் அதைச் சிறப்பாகவும், எதிர்பார்த்ததற்கு மேலேயும் செய்யக் கூடிய ஆற்றல் பெற்றவர்! அவருக்கு நீங்கள் எல்லாம் உதயசூரியன் சின்னத்தில் உங்களுடைய பொன்னான வாக்குகளை அளிக்க வேண்டும்.

அடுத்து, கோவை வடக்கு சட்டமன்றத் தொகுதியில் நமது வெல்லும் வேட்பாளர் துரை செந்தமிழ்ச் செல்வன் அவர்கள். பாரம்பரிய திராவிட முன்னேற்றக் கழகக் குடும்பத்தைச் சேர்ந்தவர். ஐ.டி. ஊழியராகப் பணியாற்றியிருக்கிறார். பகுதிக் கழகத்தின் செயலாளராக இருந்து, இப்போது கோவை மாநகரக் கழகத்தின் செயலாளர் பொறுப்பை ஏற்றிருப்பவர். இவரது தந்தை துரை மேவராஜன் அடிமட்ட தொண்டராக இருந்து, கோவை மாநகர் பீளமேடு பகுதிக் கழகச் செயலாளராகப் பணியாற்றியவர். துரை. செந்தமிழ் செல்வனுக்கு உதயசூரியன் சின்னத்தில் நீங்கள் எல்லாம் பொன்னான வாக்குகளை வழங்கிட வேண்டும்.

அடுத்து, சூலூர் சட்டமன்றத் தொகுதியில் நமது வெல்லும் வேட்பாளர் தளபதி முருகேசன் அவர்கள். விவசாயத்தைத் தொழிலாகக் கொண்டுள்ளவர், கண்ணம்பாளையம் பேரூராட்சித் தலைவராகவும் கடந்த 2011-16-இல் பணியாற்றி இருக்கிறார். சூலூர் - திருச்சி சாலை விரிவாக்க குழுத் தலைவர் உள்ளிட்ட பல்வேறு பொறுப்புகளை வகித்த அனுபவமிக்கவர். அவருக்கு நீங்கள் எல்லாம் உதயசூரியன் சின்னத்தில் ஆதரித்து வெற்றி பெற வைக்க வேண்டும்.

அடுத்து, கிணத்துக்கடவு சட்டமன்றத் தொகுதியில் நமது வெல்லும் வேட்பாளர் கே.வி.கே. சபரி கார்த்திகேயன். மறைந்த முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் கே.வி.கே. என்று அழைக்கப்படும் கே.வி. கந்தசாமி அவர்களின் பேரன். கே.வி.கே. அவர்கள் 3 முறை சட்டமன்ற உறுப்பினராக இருந்தவர். அவரது பேரனான சபரி கார்த்திகேயன் அவர்கள், 1998 முதல் கழக உறுப்பினராகவும், பெரிய நெகமம் பேரூராட்சித் தலைவராகவும் பணியாற்றி, இப்போது, கோவை தெற்கு மாவட்ட இளைஞரணி அமைப்பாளராக இருக்கிறார். அவருக்கு உதயசூரியன் சின்னத்தில் நீங்கள் ஆதரித்து வாக்களித்து வெற்றி பெற வைக்க வேண்டும்.

### உங்கள் வாக்கு உதயசூரியனுக்கு மட்டுமே!

பொள்ளாச்சி சட்டமன்றத் தொகுதியில் கொங்குநாடு மக்கள் தேசிய கட்சியைச் சேர்ந்த வெல்லும் வேட்பாளர் நித்தியானந்தம் அவர்கள். இங்கு நம்முடைய மேடையில் இருக்கும் சகோதரர் ஈஸ்வரன் அவர்களின் ஆதரவு பெற்ற வேட்பாளர். அவரால் அறிவிக்கப்பட்டிருக்கும் வேட்பாளர். கூட்டணிக் கட்சியாக இருந்தாலும், நமது வெற்றிச் சின்னமான உதயசூரியன் சின்னத்தில் அவர் நிற்கிறார். பொள்ளாச்சி கழக உடன்பிறப்புகள் கடுமையாக களப்பணி ஆற்றி, பெருவாரியான வாக்கு வித்தியாசத்தில் அவரை வெற்றி பெற வைக்க வேண்டும்.

அடுத்து, வால்பாறை சட்டமன்றத் தொகுதியில் நமது வெல்லும் வேட்பாளர் குட்டி என்கிற ஆ. சுதாகர் அவர்கள்! இவரது தந்தை ஆரோக்கியம் அவர்கள் வால்பாறை நகர அவைத் தலைவராக இருந்தவர். சுதாகர் மளிகைக் கடை நடத்தி வருகிறார். கழகத்தின் மாணவரணியில் இருந்தவர், கிளைச் செயலாளர், வார்டு செயலாளர், நகராட்சியில் 2 முறை நகராட்சித் தலைவராக இருந்திருக்கிறார். 2022-ஆம் ஆண்டிலிருந்து வால்பாறை நகர தி.மு.கழகத்தின் செயலாளராக இருக்கிறார். அவரை நீங்கள் எல்லாம் உதயசூரியன் சின்னத்தில் ஆதரித்து வெற்றி பெற வைக்க வேண்டும்.

### கூட்டணி கட்சி வேட்பாளர்களின் வெற்றியை உறுதி செய்வீர்!

அடுத்து, தொண்டாமுத்தூர் சட்டமன்றத் தொகுதி, நமது வெல்லும் வேட்பாளர் என். ஆர். கார்த்திகேயன் அவர்கள். கழகத்தில் மாவட்டப் பிரதிநிதியாக இருக்கிறார். நரசிபுரம் ஊராட்சியின் தலைவராக பணியாற்றி இருக்கிறார், 2010-ஆம் ஆண்டு தமிழ்நாடு அரசின் சிறந்த ஊராட்சிக்கான உத்தமர் காந்தி விருது பெற்றவர். அவருக்கு உதயசூரியன் சின்னத்தில் பொன்னான வாக்குகளை நீங்கள் வழங்கிட வேண்டும்.

அடுத்து, மேட்டுப்பாளையம் சட்டமன்றத் தொகுதியில் நமது வெல்லும் வேட்பாளர் கவிதா கல்யாணசுந்தரம். இவர் கோவையின் காவல்தெய்வமாக போற்றப்படும் அருள்மிகு கோணியம்மன் திருக்கோவிலின் அறங்காவல் குழு உறுப்பினராக இருந்தவர். இவரது கணவர் எஸ்.எம்.டி. கல்யாண சுந்தரம், காரமடை வடக்கு ஒன்றியச் செயலாளராக இருக்கிறார். கவிதா கல்யாணசுந்தரம் அவர்களுக்கு மேட்டுப்பாளையத்தில் இருக்கும் மக்கள் உதயசூரியன் சின்னத்தில் வாக்கினை வழங்கி வெற்றி பெற வைக்க வேண்டும்.

அடுத்து, சிங்காநல்லூர் சட்டமன்றத் தொகுதி, கவுண்டம்பாளையம் சட்டமன்றத் தொகுதி. இந்த இரண்டு சட்டமன்றத் தொகுதிகளுக்கும் காங்கிரஸ் கட்சியின் சார்பில் வேட்பாளர்கள் விரைவில் அறிவிக்கப்பட இருக்கிறார்கள். சகோதரர் ராகுல் காந்தி அவர்களால் அறிவிக்கப்பட இருக்கும் வேட்பாளர்களுக்கு கை சின்னத்தில் உங்கள் பொன்னான வாக்குகளை அளிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அளிப்பீர்களா? உங்கள் வாக்கு உதயசூரியனுக்குதானே? உங்கள் வாக்கு நம்முடைய கூட்டணிக் கட்சிகளுக்குத்தானே? வெற்றி உறுதியா? உறுதி (மக்கள்). நன்றி! வேட்பாளர்கள் இப்போது அமரலாம்.

கடந்த நாடாளுமன்றத் தேர்தலிலும், நகர்ப்புற உள்ளாட்சித் தேர்தலிலும் தி.மு.க. கூட்டணிக்கு மிகப் பெரிய வெற்றியை, கோவை மக்களான நீங்கள் தந்தீர்கள். அது 2026 தேர்தலிலும் முழு வெற்றியாக தொடர வேண்டும்! இதை அன்போடு மட்டுமல்ல, முழு உரிமையோடும் கேட்கிறேன்.

### கோவைக்கு செய்த திட்டங்கள்!

ஏன் தெரியுமா? திராவிட மாடல் ஆட்சியில் கடந்த ஐந்தாண்டு காலத்தில் அந்தளவிற்கு இந்த மேற்கு மண்டலத்திற்கு, குறிப்பாக கோவைக்கு பல்வேறு சாதனைத் திட்டங்களை நாங்கள் செய்திருக்கிறோம். உண்டா? இல்லையா? அந்த உரிமையில்தான் உங்களிடம் முழு வெற்றியை கொடுங்கள் என்று கேட்கிறேன். எல்லாவற்றையும் சொல்ல நேரமில்லை. அதனால், சில பெரிய திட்டங்களை மட்டும், ஹைலைட்ஸாக சொல்ல விரும்புகிறேன்.

கோவையில் தினமும் ஆயிரக்கணக்கில் மக்கள் கூடி மகிழும் செம்மொழி பூங்கா,

அடுத்து, தமிழ்நாட்டிலேயே நீளமான ஜி.டி. நாயுடு மேம்பாலம். இந்தப் பாலத்தை சின்னியம்பாளையம் முதல் நீலாம்பூர் வரை இன்னும் 5 கிலோமீட்டருக்கு நாம் ஆட்சிக்கு வந்ததற்குப் பின்னால் நீட்டிக்கப் போகிறோம்,

ஆர்.எஸ். புரம் மாநகராட்சி மேல்நிலைப் பள்ளியில் உலகத்தரத்தில் ஹாக்கி மைதானம்,

இதேபோன்று, ஆத்துப்பாலம் முதல் உக்கடம் சந்திப்பு ஒப்பணக்கார வீதி வரை உயர் மட்ட மேம்பாலம்,

இருகூர் - பீளமேடு இரயில் நிலையங்களுக்கு இடையே சாலை மேம்பாலம்,

பில்லூர் 3-ஆம் குடிநீர் திட்டப் பணிகள்,

தொடர்ச்சி 7 – ஆம் பக்கம்

**பா.ஜ.க.வைத் தமிழ்நாடு ஏன் இந்த அளவிற்கு எதிர்க்கிறது என்றால், தமிழை, தமிழரை, தமிழ்நாட்டை பா.ஜ.க. வஞ்சிக்கிறது, இன்னும் வெளிப்படையாகச் சொன்னால் அவமானப்படுத்துகிறது. தமிழ்நாட்டிற்கு வந்தால் தமிழ் பாசத்தில் நம்மையே மிஞ்சுவது போன்று நடிக்கிறார்கள் இல்லையா? இதுவே பீகார் மாநிலத்தில் தேர்தல் நடந்தபோது பிரதமர் மோடி என்ன பேசினார்? “தமிழ்நாட்டில் பீகார் மக்களைத் தொடர்ந்து துன்புறுத்துகிறார்கள்” என்று பொய்யைப் பேசினார். அவர் வகிக்கும் உயர்ந்த பதவிக்குத் தகுதியான பேச்சா இது? இப்போது தமிழ்நாட்டிற்கு நீங்கள் வாக்கு கேட்டு வரப்போகிறீர்கள். பீகாரில் பேசிய அந்த வார்த்தையை தமிழ்நாட்டில் தைரியம் இருந்தால் பிரதமர் மோடி அவர்கள் சொல்வாரா? இதைத்தான் நான் கேட்கிறேன்.**